# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் -11

# ஆவி
# ஆத்மா
# சரீரம்

பாகம்-1




Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்




## ஆவி ஆத்மா சரீரம்

பாகம்-1




கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே, இன்று மனிதனின் ஆத்துமா பற்றிய தேவனுடைய சத்தியம் என்னவென்று ஆராயலாம்.

மனித ஆத்துமா என்றால் என்ன? பொதுவாக இன்று இதுபற்றி பல்வேறு மதத்தினர், விஞ்ஞானிகள் மற்றும் அநேக கிறிஸ்தவப் பிரிவுகள் என்ன விசுவாசம் கொண்டுள்ளனர் என்று முதலில் அறிந்துகொள்ளவேண்டும்.

முதலாவது நமது நாட்டில் உள்ள எல்லா மதத்தினரும் மனிதனுடைய ஆத்துமா கண்ணுக்குப் புலப்படாததாயும், அழியாததாயும் உள்ளதோடு, மனிதனுடைய மரணத்தில் அந்த ஆத்துமா உடலில் இருந்து விடுதலையாகி மறு ஜென்மம் எடுத்து புதிய உடலில் புகுந்து(Rebirth), பின் பரம ஆத்துமாவோடு இணையும்வரை இவ்வாறு புணர்ஜென்மம் எடுக்கும் என நம்புகின்றனர்.

மேற்கு ஆசியா நாடுகளில்(இஸ்லாமிய விசுவாசம்), கடவுள் அநேக ஆத்துமாக்களை உருவாக்கி அவைகளை மனித உடலில் வைத்து பூமிக்கு அனுப்பி தம்மை மகிமைப்படுத்துகிறார்களா? என்று பார்க்கிறார். இந்த ஆத்துமாக்களும், 'கண்ணுக்குப் புலப்படாததும், அழியாததும், அழிக்க முடியாததுமாகும்" என நம்புவதோடு கடவுளுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் ஆத்துமாக்கள் மோட்சத்திற்கும் மற்றவை எரிநரகத்திற்கும் செல்லும் என நம்புகின்றனர்.

கிறிஸ்தவர்களின் விசுவாசத்திற்கு வரும்போது ரோமன் கத்தோலிக்க சபையின் விசுவாசம் என்னவெனில் அவர்களும் ஆத்துமா கண்ணுக்குப் புலப்படாததும் அழியாததும் மரணத்தில் உடலிலிருந்து விடுபட்டு தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கு முன்பாக, நன்மை செய்திருந்தால் பரலோகத்திற்கும் தீமை செய்திருந்தால் நரகத்திற்கும், பாதி நன்மை, பாதி தீமை செய்திருந்தால் உத்தரிக்கும் ஸ்தலத்திற்கும் செல்வதாக நம்புகின்றனர்.










பல மதப்பிரிவினர்களின் நம்பிக்கை

அனைத்து புராட்டஸ்டண்ட் பிரிவினர் கூட ஆத்துமா

கண்ணுக்குப் புலப்படாததும் அழியாததுமானதும் உயிர்த்தெழுதலில் மீண்டும் எழும்போது இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் பரலோகத்திற்கும், மற்ற அனைவரும் நரகத்திற்கும் செல்வதாக அவர்களும் நம்புகின்றனர்.

விஞ்ஞானிகளும் மனித ஆத்துமாபற்றி புரியாத புதிராக இருந்தாலும்கூட அநேக பரிசோதனைகளுக்கு பின்பு அவ்வாறே நம்புகின்றனர். மரணத்தருவாயில் இருக்கும் ஒரு நபரை காற்றுப்புகாத கண்ணாடிப்பெட்டியில் வைத்துவைத்தனர். அந்நபர் மரிக்கும்போது என்ன நடக்கும் என்பதை கவனிப்பதற்கு கேமராக்களை பொருத்திப் பார்த்தபோது, விரிசல் விட்டு அந்த ஆத்துமா மரித்த சரீரத்தைவிட்டு வெளியேறினதை அனைவரும் அறிவர் (Ref. Discovery Channel - 'Believe it or not' என்னும் நிகழ்ச்சியில்)

ஆக ஏறத்தாழ உலகின் ஒட்டுமொத்த ஜனங்களும் மனித ஆத்துமா கண்ணுக்குத் தெரியாததும் (Invisible) அழிக்க முடியாததுமாயிருக்கிறது(Immortal) என நம்புகின்றனர். தற்கால பிசாசின் உலகின் எல்லா மதத்தினருடைய விசுவாசம்தான் மகா பரிசுத்தமான தேவனுடைய சத்தியமாயிருக்குமா? சற்று யோசிக்கவேண்டும் அன்பானவர்களே.

இப்போது மனித ஆத்துமா பற்றி தேவனுடைய பரிசுத்த வேதாகமம் என்ன கூறுகிறது என்று பார்ப்போம். ஐந்து கேள்விகள் மற்றும் அவற்றின் பதில்கள் மூலம் மனித ஆத்துமாபற்றி எளிதாகப் புரிந்துகொள்ளலாம்.

கேள்வி1-ஆத்துமா சாகுமா? அல்லது மரிக்குமா? அல்லது அழியுமா?

கேள்வி 2 - ஆத்துமா கண்ணுக்குத் தெரியுமா?

கேள்வி 3 - ஆத்துமாவினால் உணவு உண்ணமுடியுமா?

கேள்வி 4 - ஆத்துமாவை பட்டயத்தால்(கத்தியினால்)வெட்டமுடியுமா?

கேள்வி 5 - ஆத்துமாவிற்கு அறிவு உள்ளதா?

மேற்சொன்ன கேள்விகளைக்கொண்டு தேவனுடைய வசனத்தின்மூலம் இதுபற்றி கவனமாக ஆராய முற்படலாம். ஏனெனில் மனித ஆத்துமா பற்றி பல்வேறு விளக்கங்கள் இவ்வுலகில் நிலவுகின்றன. மேலும் ஒருவன் போதித்தால் வேதவாக்கியங்களின்படி போதிக்கவேண்டுமல்லவா

### கேள்வி 1 - ஆத்துமா அழியுமா? அல்லது சாகுமா?

**எசேக்கியேல் 18:4,20 ல், 'பாவம் செய்கிற ஆத்துமா சாகும்"**

ஆம். இவ்வசனம் ஆத்துமா அழியக்கூடியதென்றும், பாவம் செய்கிற அனைத்து ஆத்துமாக்களும் சாகும் என்ற ஆச்சரியமான விடை தேவ சத்தியத்தில் கிடைக்கிறது

**2நாளாகமம் 6:36ல் "பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே"**

**ரோமர் 3:9-12ன்படி,** தேவனுடைய பார்வையில் **'நீதிமான்ஒருவனாகிலும் இல்லை"** என்று பார்க்கிறோம். ஆக, எல்லா ஆத்துமாக்களும் பாவஞ்செய்கிற ஆத்துமாக்களாகிறது. ஆகவே நிச்சயமாகவே சாக வேண்டும். இதைக்குறித்து,

**சங் 22:29ல்,'ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைக்காக்கக் கூடாதே"**

என தெளிவாக வாசிக்கிறோம். ஆம். மனுக்குலத்திலுள்ள எந்த ஆத்துமாவும் மரணத்திலிருந்து தப்பமுடியாது. எல்லா ஆத்துமாக்களும் மரிக்கும். ஆம். மரணத்தில் சரீரம் மட்டும் அல்ல, ஆத்துமாவும் மரிக்கிறது. இதுவே நம்முடைய வேதாகமம் நமக்குப் போதிக்கிற பாடமாகும்.

**சங் 33:19ல்,' ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைக் காக்கக்கூடாதே"**

என தெளிவாக வாசிக்கிறோம்.

**சங்கீதம் 33:19ல்,'தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும்"**

**சங்கீதம் 56:13 ல் 'நீர் என் ஆத்துமாவை மரணத்திற்கும் என் கால்களை இடறலுக்கும் தப்புவியாதிருப்பீரோ?"**

புதிய ஏற்பாடும் ஆத்துமாவின் அழிவைக்குறித்து போதிக்கிறது.

**யாக்கோபு 5:20ல்,'தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்"**

**அப்போ 3:23ல், 'அந்த தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்"** (ஆங்கிலத்தில் வாசித்தறியவும்)

ஆக ஆத்துமாவிற்கு மரணம் அல்லது அழிவு இருக்கிறது என வேதம் தெளிவாகக் கூறுகிறதை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்ளாமல் இருக்கமுடியும்.

மேலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆத்துமா மரித்ததா? இயேசுவின் வார்த்தைகளிலிருந்து பதிலைக் காணலாம்.



**மத்தேயு 26:38, 'என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கம்கொண்டிருக்கிறது"**

என்று தம் ஆத்துமா மரிக்கப்போவதைப்பற்றிப்பேசினார். அவருடைய மரணத்தைக்குறித்து தீர்க்கதரிசனத்தில் வாசிக்கையில்,

**ஏசாயா 53:12ல்,'அவர் தம் ஆத்துமாவை மரணத்திலூற்றி"**

ஆம். இயேசுவின் ஆத்துமாவும் மரித்தது. பாவம் செய்த எல்லா ஆத்துமா சாகும் என்று நாம் வாசித்திருக்க, இயேசுவின் காரியத்தில் அவர் தன்னுடைய பாவத்திற்காக மரிக்காமல், உலகத்தின் பாவத்துக்காக மரித்தார். ஆகவே எல்லா ஆத்துமாக்களும் இயேசுவின் ஆத்துமா உட்பட மரிக்கும் என்பதை வேதாகமம் போதிக்கிறதை அறிந்துகொண்டோம்.

**கேள்வி 2 ஆத்துமா கண்ணுக்குத் தெரியுமா? அல்லது ஆத்துமாவிற்கு இரத்தம் உள்ளதா?**

சரீரத்திற்கு மாத்திரம் இரத்தம் உள்ளதென்றும், ஆத்துமாவுக்கு இல்லை என்றும் பொதுவாக நம்பப்படுகிறது. இதைக்குறித்து வாசிக்கையில்,

**எரேமியா 2:34ல்,'உன் வஸ்திர ஓரங்களிலும் குற்றமில்லாத ஏழை ஆத்துமாக்களின் இரத்தம் காணப்படுகிறது"**

ஆக வேதவசனத்தின்படி, ஒரு ஆத்துமாவிற்கு இரத்தம் இருக்கிறது. இரத்தத்தை நம் கண்களால் காணமுடியுமாதலால் ஆத்துமாவைக்கூட காணமுடியும் என்று பார்க்கிறோம்.

**கேள்வி 3 ஒரு ஆத்துமாவினால் உணவு அல்லது மாம்சம் உண்ணமுடியுமா?**

**யாத்திராகமம் 12:4இல்,'தங்களிடத்திலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத்தக்கதாக ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும். அவனவன் புசிப்புக்குத் தக்கதாக இலக்கம்பார்த்து ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும்.**

ஆக ஆத்துமாக்களால் உணவு மாத்திரமல்ல, மாம்சம்கூட உண்ணமுடியும் எனத் தெளிவாகிறது.

**கேள்வி 4 ஆத்துமாவைப் பட்டயத்தால் வெட்டமுடியுமா?**

**லூக்கா 2:35ல், 'உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் "**

**யோசுவா 11:11ல், 'அதிலிருந்த நரஜீவன்களையெல்லாம் (Souls) பட்டயக் கருக்கினால் வெட்டி"**

என வாசிக்கிறோம்(ஆங்கிலத்தில் KJVல் வாசிக்கவும்). ஆக ஆத்துமாக்களை பட்டயத்தால் வெட்டமுடியும் எனப் பார்க்கிறோம். அதாவது ஆத்துமா கண்ணுக்குத் தெரியும் என்பது புலனாகிறது.

**கேள்வி 5 ஆத்துமாவிற்கு அறிவுள்ளதா?**

**நீதிமொழிகள் 19:2ல், 'ஆத்துமா அறிவில்லாமல் இருப்பது நல்லதல்ல"**



எனப் பார்க்கிறோம். இதிலிருந்தும் ஆத்துமா அறிவுள்ளது எனவும் அறிகிறோம். ஆத்துமா கண்ணுக்குப் புலப்படக்கூடியதாகவும், மரிக்க(அழியக்)கூடியதாகவும் இருக்கிறது என்று வேதாகமத்தின்படி பார்த்தோம். சரி. ஆத்துமா என்றால் என்ன? என்பதில் உங்களுக்கு அளவில்லா ஆர்வம் இருக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இக்கேள்விக்கு தேவன்தாமே தம்முடைய வசனத்திலிருந்து தக்க பதிலைத்தரவேண்டும்.

**ஆதியாகமம் 2:7ல்,'தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்.**

இங்கு மண்ணினாலே ஒரு சரீரத்தை உண்டாக்கி எனும்போது, அநேகர் இதை களிமண்ணினால் ஒரு பொம்மையை உருவாக்கினார் என எளிதாக நம்பிவிடுகின்றனர். ஆனால் பூமியிலுள்ள எல்லா மூலங்களையும்(106 மூலங்களையும்) வைத்து ஒரு சரீரத்தைப் படைத்தார் என்பதே சத்தியமாய் இருக்கிறது. பூமியில் உள்ள இரும்புச்சத்து, கால்சியம் சத்து, மெக்னீசியம், பாஸ்பரஸ் போன்ற அனைத்தும் நம் உடலில் இருக்கிறதே. இப்போது ஜீவசுவாசத்தை தேவன் அதின் நாசியிலே ஊதும்போது மனிதன் ஜீவாத்துமாவானான் என்று பார்க்கிறோம்.




**1கொரிந்தியர்15:45ல் -'முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான்**

என வாசிக்கிறோம்

**உடல் + ஜீவ சுவாசம் = உயிருள்ள ஆத்துமா**

(மூலங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது) (தேவனுடைய வல்லமையினால் உயிரடையச் செய்யும் சுவாசம்) (உயிருள்ள மனிதன்)

உடல்மட்டும் தனியாகவோ அல்லது ஜீவசுவாசம் மட்டும் தனியாகவோ ஆத்துமா என்று அழைக்கமுடியாது. மாறாக இவையிரண்டும் சேர்த்தே உயிருள்ள ஆத்துமா ஆகிறது. இதை நாம் நீரில் உள்ள மூலக்கூறுகளைஉதாரணமாகப் பார்த்துப் புரிந்துகொள்ளலாம்.

**ஹைட்ரஜன்- ஆக்ஸிஜன் = தண்ணீர்**

**O H $_2$ Water**

இங்கு இரண்டு பங்கு ஹைட்ரஜன் ஒரு பங்கு ஆக்ஸிஜன் இணையும்போதுதான் நீர் கிடைக்கிறது. ஹைட்ரஜன் மாத்திரம் நீர் அல்ல. அதுபோல் ஆக்சிஜன் மாத்திரம் தண்ணீர் அல்ல. மனித ஆத்துமாவும் அதுபோலவே இருக்கிறது. ஜீவசுவாசம் அல்லது ஆவி சரீரத்தை விட்டுப் பிரியும்போது சரீரம் ஜீவனற்றதாகிறது. நாம் சாதாரணமாக பேசும்போது, உங்கள்சபையில் எத்தனை ஆத்துமாக்கள் உள்ளது ? வீட்டில் எத்தனை ஆத்துமாக்கள் உள்ளது? மேலும் நமது தேசப்பிதா காந்திஜியைக் குறிப்பிடும்போது'மகாத்மா", மேலும் ஆத்தும ஆதாயம் என்றெல்லாம் கூறுகிறோமே.

மனிதனைத்தானே நாம் ஆத்துமா என குறிப்பிடுகிறோம். அதுமட்டுமல்ல, உடலும் உயிருமுள்ள மிருகங்கள், பறவைகள், மீன்கள், பூச்சிகள் என அனைத்தும் ஆத்துமா என்றே வேதத்தில் அழைக்கப்படுகிறது.

**ஜீவ சுவாசம் ஒன்றே - உடல், அறிவில் வித்தியாசம்**



**பிரசங்கி 3:18-21- மனுபுத்திரன் தாங்கள் மிருகங்களைப்போல் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் காணும்படிக்கு தேவன் அவர்களைச் சோதிக்கிறாரென்று நான் மனுஷருடைய நிலைமையைக் குறித்து என் உள்ளத்தில் எண்ணினேன். மனுபுத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும்.அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு. இவைகள் சாகிறதுபோலவே அவர்களும் சாகிறார்கள். ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே.மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல. எல்லாம் மாயையே. எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது . எல்லாம் மண்ணிலே உண்டாகிறது எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது. உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழ பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்?**

சுவாசம் அல்லது ஆவியைப் பொருத்தவரையில் மனிதனுக்கும் மிருகத்திற்கும் எந்த வித்தியாசமும் இல்லை. ஆனாலும் இவைகள் மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற மேன்மையான நுண்ணறிவின் விகிதத்திலிருந்து வித்தியாசப்படுகிறார்கள். ஆனால் இருதிறத்தாரின் சுவாசமும் ஒன்றே. இது எப்படி என்று நீங்கள் கேட்கலாம்.

உதாரணமாக, 10 மாறுபட்ட விதவிதமான தொலைக்காட்சிப் பெட்டிகள் வெவ்வேறு சேனல்களில் இயங்கிக்கொண்டிருந்தாலும், அதற்கு வரும் மின்சாரம் ஒன்றே. இந்த மின்சாரம் துண்டிக்கப்படும்போது எல்லாப் பெட்டிகளும் செயலிழந்துவிடும். ஆகவே மிருகங்களையும் மனிதர்களையும் இயக்கக்கூடிய சுவாசம் ஒன்றுதான். ஜீவசுவாசத்தைப்பற்றிய சத்தியத்தை அறிந்த நாம், இப்போது ஆத்துமாவின் மற்றொரு பகுதியாகிய சரீரத்தைக் குறித்து தியானிக்கலாம்.

**சங்கீதம் 139:14** ல், தேவன் அற்புதமான இந்த ஆத்துமாக்களை)மிருகங்கள் உட்பட) எவ்வாறு ஆச்சரியமாக உண்டுபண்ணுகிறார்.

நம் உடலில் இருக்கும் சரீர அமைப்பில் எலும்புமண்டலம் தசை மண்டலம் நரம்பு மண்டலம் இரத்த மண்டலம் மற்றும் உறுப்புகள் எவ்வளவு உன்னதமாக ஒற்றுமையாக வேலைசெய்கிறது. நம் உடலில் 206 எலும்புகளில் மிகப்பெரியது தொடை எலும்பும் காது ஜவ்வு சிறிய எலும்புமாகும்.


தசை மண்டலம்


எலும்புமண்டலம்


இரத்த மண்டலம்

முழு சரீரமும் 20 சதுரஅடி தோலினால் மூடப்பட்டிருக்கிறது. தலையில் கிட்டத்தட்ட 50 இலட்சம் முடிகள், இவை ஒவ்வொன்றும் 3 வருடங்களுக்கு நிலைத்திருக்கிறது. மேலும் 650 வித தசைகள், 100 மூட்டுகள், 60000 மைல்கள் நீளமுள்ள இரத்தக் குழாய்கள், 30000 மில்லியன் நரம்பு செல்கள், 9000 சுவையறியும் செல்கள்(Taste Buds), 40 இலட்சம் தொடு உணர்வுசெல்கள் என மனித விஞ்ஞானத்திற்கே சவாலாக விளங்கும் நம் உடலில்,நம் மூளையின் வேலையை யோசித்துப் பார்க்கவும்.பலதுல்லியமானகம்ப்யூட்டர்களைவிடபலமடங்குசக்திவாய்ந்த வேலைகளைசெய்கிறதே.

தேவன் ஆதாமை எப்படி சிருஷ்டித்திருப்பார் என்று நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா? அவர் மண்ணினால் ஒரு பொம்மையை செய்து அதின் நாசியில் சுவாசத்தை ஊதினவுடன் மனிதனாக மாற்றப்பட்டான் என்றுதான் அநேகர் நினைக்கின்றனர். ஆனால் வேதத்தை ஆராய்ந்துபார்த்தால் வேறுவிதமாக சொல்லப்பட்டிருக்கிறது. இதைக்குறித்து நாம் வாசிக்கையில்,

**யோபு 10:10 - 'நீர் என்னைப் பால்போல் வார்த்து, தயிர்போல் உறையப்பண்ணினீர் அல்லவோ?"**

இதன் பொருள் என்ன? தேவன் முதலாவது எலும்புகளை அதாவது திரவ கால்சியத்தை ஊற்றி, அச்சுக்களாக வார்த்து, பின்பு தேவையான வடிவத்தை உருவாக்கி இணைத்ததைக் கூறுகிறது. ஆம் மனிதனை தேவன் சிருஷ்டிக்கும்போது எலும்புகளே முதலில் உருவாக்கப்பட்டிருக்கவேண்டும். எப்படியெனில் ஒரு கட்டிடம் நிற்பதற்கு அதனுடைய தூண்கள் முதலில் கட்டப்படுவதுபோல் மனிதனும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கவேண்டும். அதன் பின்பு தேவன் செய்தது என்ன இதைக்குறித்து

**யோபு 10:11 - 'தோலையும் சதையையும் எனக்குத் தரித்து, எலும்புகளாலும் நரம்புகளாலும் என்னை இசைத்தீர்"**

ஆம். எலும்புகளை உருவாக்கினபின்பு அவைகள் தசை நார்களுடன் இணைக்கப்பட்டு பின்பு இவை இரத்த நாளங்களுடனும், நரம்புகளுடனும் இணைக்கப்பட்டது. இவைகள் வழியாக ஜீவன் உள்ளும் புறமும் ஓடுகிற இரத்தம் மூலமாக எடுத்து செல்லப்பட்டது. இதைத்தான் சகலமும் சதையினாலும் தோலினாலும் மூடப்பட்டது என்று வாசிக்கிறோம். இது மனிதனுடைய சிருஷ்டிப்பைப் பற்றிய மேலோட்டமான அடிப்படைக் காரியமாகும்.

ஆரம்பத்தில் மனிதனை தேவன் நேரடியாக இவ்வாறு சிருஷ்டித்திருக்கும்போது, அதன்பின்பு ஆத்துமாக்களை கண்ணுக்குத்தெரியாத கருமூலம் தாயின் வயிற்றிலிருந்து வளரச்செய்து, இப்போது எத்தனை கோடி ஆத்துமாக்களை இவ்வுலகம் கண்டிருக்கிறது-**பிரசங்கி 11:5** ல் வாசித்தறியவும்.




**'ஆவியின் வழி இன்னதென்றும், கர்ப்பவதியின் வயிற்றில் எலும்புகள் உருவாகும்விதம் இன்னதென்றும் நீ அறியாதிருக்கிறதுபோலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய் "**

ஆத்துமாவின் சாவு அல்லது அழிவு எவ்வாறு ஏற்படுகிறது? வேத வசனத்தில் தான் நாம் அதையும் அறியமுற்படவேண்டும்.

**பிரசங்கி 12:7ல், 'இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத்திரும்பி, ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும்"**

எனும்போது, மரணத்தில் மண்ணாகிய இச்சரீரம் மண்ணிற்கே சென்று அதினதின் மூலக அணுக்கள் அதினதின் மூலக அணுக்களுடன் சேர்ந்துவிடுகிறதினால், சிலகாலம் கழித்து நம் உடல் தோண்டிப்பார்த்தாலும்கூட அவ்விடத்தில் இருப்பதில்லை. ஜீவசுவாசம் உடலில் இருந்து பிரிந்து தேவனிடத்தில் சேருகிறபோது அங்கு'ஆத்துமா" இல்லாமல் ஆகிவிடுகிறது.

**ஆத்துமா என்ற சொல்லுக்கு எபிரேயு பாஷையில் நெபேஷ்**(Nephesh)என்றும், **கிரேக்க பாஷையில் சூகே**(Psuche) என்றும் பெயர். ஆகவே அன்பானவர்களே, இதன்பொருள் என்னவெனில், 'உயிருள்ளபொருள்" (Breathing Creature i.e.Animal), மனது(இதயம்) ஜீவன்(Spirit) Ref.Strong Heb.Concordance No.5315 பின் எவ்வாறு இந்த அழியாத ஆத்துமா யோசனை உலகில் நுழைந்தது? அதையும் வேத வசனத்திலேயே கண்டுபிடித்துவிடலாம்.

**ஆதியாகமம் 2:16,17ல், தேவன் 'நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கும்நாளிலே சாகவே சாவாய்"**

என்று கட்டளையிட்டார்.

ஆதாம் ஒரு ஆத்துமாவாக இருந்தார். மேலும் ஆத்துமாவாக இருந்து மரிப்பதன்அபாயத்தைக் குறித்து தேவன் ஆதாமுக்கு அறிவித்திருந்தார். நீ புசிக்கும்நாளில் சாகவே சாவாய் என்று ஆதாமைக்குறித்து சொல்லப்பட்ட வார்த்தையானது, ஒருவேளை அவர் கீழ்ப்படியாமற்போனால் ஆத்துமாவாகிய அவர் மரிப்பார் என்பதே. இதுவே ஏதேன் தோட்டத்தில் சாட்சியாக சொன்ன வார்த்தைகள்.ஆனால் **ஆதியாகமம் 3:4ல்** சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி,**'நீங்கள் சாகவே சாவதில்லை"** என்ற உலகின் முதல் பொய் சாத்தான் மூலம் நுழைக்கப்பட்டதையே உலகில் இன்னும் 99.9% மக்கள் நம்புகின்றனர். அன்பானவர்களே யோவான் 8:44ல், வாசித்தறியவும்.

எவ்வாறெனில், ஏசாயா 5:20ல், சாத்தானுடைய தந்திரவேலையானது ,

**'தீமையை நன்மையென்றும் நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும் வெளிச்சத்தை இருளுமாக பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பை கசப்புமாக சாதிக்கிறவர்களுக்கு ஐயோ".**

மேலும் மனிதனே தான் உண்டாக்கின எந்தவொரு பொருட்களையும் அழிக்கும் திறன் உடையவனாயிருக்கும்போது சர்வவல்ல தேவனால் முடியாதா என யோசித்துப்பார்க்கவேண்டும். ஆக மரணத்தில் ஆத்துமாவின் உண்மையான நிலைமை என்ன என்று பார்க்கும்போது,

**பிரசங்கி 9:4-6,10 ல், மரணத்திற்கு நீங்கலாயிருக்கிறவன் யார்? உயிரோடிருக்கிற அனைவரிடத்திலும் நம்பிக்கையுண்டு. செத்த சிங்கத்தைப் பார்க்கிலும் உயிருள்ள நாய் வாசி. உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே. மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள். இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை. அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள்** ⇨

**சிநேகமும் அவர்கள் பகையும் அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்து போயிற்று. சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை... நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே.**

**சங்கீதம் 6:5,115:7லும், ஏசாயா 38:18லும் மரணத்திற்கு செல்பவர்கள் தேவனைத் துதியார்கள்.**

**யோபு 7:9,10**ல், மரித்தவர்கள் மீண்டும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பமாட்டார்கள் என்று வாசிக்கிறோம். ஆனால் இன்று அநேகர் மரித்தவர்கள் மீண்டும் வந்துவிடுவார்கள் என எண்ணி, மரித்தவர்களை கல்லறைக்கோ எரிப்பதற்கோ எடுத்துச்செல்லும்போது வழியிலே, நூல், பொரி முதலியவற்றை வீசி செல்வதைக் காண்கிறோம். ஏனென்றால் ஒருவேளை அந்த இறந்தஆவி வீடு திரும்பினால், அப்படி திரும்புவதற்கு முன் , சிந்தின பொரிகளை பொறுக்கிக் கொண்டே வரவேண்டும். ஆனால் அதைப்பொறுக்குமுன்பு விடிந்துவிடுவதனால் ஆவிகள் செயலிழந்துவிடுகின்றன என்று நம்புகிறார்கள். பகலில் அவைகளால் ஒன்றும் செய்யமுடியாது என்றும் நம்புகின்றனர்.

**யோபு 14:21**ல், மரணமடைந்த ஒருவனது

**'.. பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான். அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக் கவனியான்"**

என்று வாசிக்கிறோம்.ஆனால் இன்று அநேகர் மரித்தவர்களையும் வணங்குவதையும் காண்கிறோமே

இப்படியிருக்க, அநேகர் மரித்தவர்களை கண்டதாக கூறுகின்றனரே, இது எவ்வாறு? அடுத்த பாடத்தில் தெளிவாக ஆராய்வோம்.

ஆக அன்பானவர்களே நாம் சாத்தானுடைய கள்ள உபதேசத்தில் விழாதபடி நம் கர்த்தர் கூறினதுபோல,

**யோவான் 8:32ல்,'சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"**

***தேவன் தாமே நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக ஆமென்.***

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/